## சுருக்கம்

கைத்தறித் தொழில் – 2021–2022–ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – 2021–2022–ஆம் ஆண்டிற்கான பட்டு மற்றும் பருத்தி இரகங்களை நெசவு செய்த சிறந்த நெசவாளர்கள் மற்றும் சிறந்த வடிவமைப்பாளர்களை தெரிவு செய்து முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் வழங்குதல் – சிறந்த நெசவாளர்களுக்கான பரிசுத் தொகையினை உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை

அரசாணை (நிலை) எண்.110

நாள் 21.10.2021
பிலவ, ஐப்பசி 4,
திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.195, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 29.08.2013.
2. அரசாணை (நிலை) எண்.179, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி2)த் துறை, நாள் 28.09.2018.
3. 2021–2022–ஆம் ஆண்டைய கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கை எண்.17–இன்போது, மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு எண்.12.
4. கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் கடிதம் ந.க.எண்.18731/ 2021/ஜே1, நாள் 13.09.2021.

--------

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஒவ்வொரு வருடமும் சிறந்த நெசவாளர்களை தேர்வு செய்து பரிசு வழங்க கொள்கை அளவிலான அனுமதியும், இத்திட்டத்திற்கென தொடரும் செலவினமாக ரூபாய் ஒரு இலட்சம் மட்டும் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் சிறந்த நெசவாளரை தேர்ந்தெடுத்து பரிசு வழங்கும் திட்டத்தை பருத்தி மற்றும் பட்டு ஆகிய இரு இரகங்களுக்கும் விரிவுபடுத்துவதன் மூலம் தனித்தனியே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் என ஒரு இரகத்திற்கு மூன்று பரிசுகள் வீதம் இரு இரகங்களுக்கு 6 பரிசுகளும், சிறந்த வடிவமைப்பாளர்களை தேர்ந்தெடுத்து பின்வருமாறு பரிசுத் தொகை வழங்க கொள்கை அளவிலான ஆணை வெளியிடப்பட்டது:-

(தொகை ரூபாயில்)

| வ. எண். | கைத்தறி இரகம் | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | பட்டு | 1,00,000 | 75,000 | 50,000 | 2,25,000 |
| 2. | பருத்தி | 1,00,000 | 75,000 | 50,000 | 2,25,000 |
| 3. | சிறந்த வடிவமைப்பாளர் | 25,000 | 10,000 | 5,000 | 40,000 |
| | மொத்தம் | 2,25,000 | 1,60,000 | 1,05,000 | 4,90,000 |

3. 06.09.2021 அன்று நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில், 2021-2022-ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கை எண்.17-ஐ தாக்கல் செய்து மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில், அறிவிப்பு எண்.12-இல், பின்வரும் அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது:-

12. **"மாநில அளவிலான சிறந்த கைத்தறி நெசவாளர் விருது வழங்கும் திட்டத்தின்கீழ் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்படும்"**

"மாநில அளவிலான சிறந்த கைத்தறி நெசவாளர் விருது வழங்கும் திட்டத்தின்கீழ் பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் புதுமையான வடிவமைப்புகளை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூபாய் 1 இலட்சம், ரூபாய் 75,000/- மற்றும் ரூபாய் 50,000 வழங்கப்பட்டு வருவதை முறையே ரூபாய் 5 இலட்சம், ரூபாய் 3 இலட்சம் மற்றும் ரூபாய் 2 இலட்சம் ஆக பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூபாய் 15.50 இலட்சம் கூடுதலாக செலவினம் ஏற்படும்."

4. மேலே பத்தி 3-இல் கண்ட மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர், சிறந்த கைத்தறி நெசவாளர் விருதுக்கான பரிசுத் தொகையினை 2021-2022-ஆம் ஆண்டு முதல் பின்வருமாறு உயர்த்தி வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

(தொகை ரூபாயில்)

| வ. எண். | விவரம் | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | பட்டு இரகத்திற்கான சிறந்த நெசவாளர் | 5,00,000 | 3,00,000 | 2,00,000 | 10,00,000 |
| 2. | பருத்தி இரகத்திற்கான சிறந்த நெசவாளர் | 5,00,000 | 3,00,000 | 2,00,000 | 10,00,000 |
| | **மொத்தம்** | 10,00,000 | 6,00,000 | 4,00,000 | 20,00,000 |

5. மேலும் 2021-2022-ஆம் ஆண்டிற்கான சிறந்த நெசவாளர் விருது மற்றும் சிறந்த வடிவமைப்பாளர் உள்ளிட்ட விருதுகள் வழங்கும் பொருட்டு, 2021-2022-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஏற்கனவே ரூ.4.90 இலட்சம் (சிறந்த நெசவாளர் விருதுக்கான தொகை ரூ.4.50 இலட்சம் மற்றும் சிறந்த வடிவமைப்பாளர் விருதுக்கான தொகை ரூ.0.40 இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை தொடர்ந்து, சிறந்த நெசவாளர் விருதுக்கான பரிசுத் தொகைகளை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க 2021-2022-ஆம் ஆண்டில் செயல்படுத்த கூடுதலாக ஏற்படும் செலவினமான ரூ.15.50 இலட்சத்தையும் சேர்த்து ரூ.20.40 இலட்சத்தை ஒதுக்கீடு செய்து வழங்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, 2021-2022-ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்ட சிறந்த நெசவாளருக்கான விருதுத் தொகை மற்றும் சிறந்த வடிவமைப்பாளருக்கான விருதுத் தொகை ஆகியவற்றை பின்வருமாறு வழங்கவும், 2021-2022-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.4.90 இலட்சம் உடன், பரிசு தொகைகளை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவின தொகையான ரூ.15.50 இலட்சத்தையும் சேர்த்து, மொத்தம் ரூ.20.40 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்தும் ஆணை வெளியிடப்படுகிறது:-

(தொகை ரூபாயில்)

| வ. எண். | விவரம் | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | பட்டு இரகத்திற்கான சிறந்த நெசவாளர் | 5,00,000 | 3,00,000 | 2,00,000 | 10,00,000 |
| 2. | பருத்தி இரகத்திற்கான சிறந்த நெசவாளர் | 5,00,000 | 3,00,000 | 2,00,000 | 10,00,000 |
| 3. | சிறந்த வடிவமைப்பாளர் | 25,000 | 10,000 | 5,000 | 40,000 |
| | மொத்தம் | 10,25,000 | 6,10,000 | 4,05,000 | 20,40,000 |

7. மேலே பத்தி 6-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.20,40,000/-ஐ கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்க வேண்டும்:-

"2851 - 00 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் - 103 - கைத்தறித் தொழில்கள் - மாநில செலவினங்கள் - KX கைத்தறி நெசவாளர்களுக்கு நிதியுதவி - 359 - பரிசுகளும் வெகுமதிகளும் - 01. பரிசுகளும் வெகுமதிகளும்"

IFHRMS (த.தொ.கு.2851-00-103-KX- 35901)

8. மேலே பத்தி 6-இல், ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.15,50,000/-, 2021-2022-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும், 2021-2022-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம், இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 6-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட

கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 6-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2021-2022-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் / திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (தொழில்கள் / வ.செ.பொ-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. ஒவ்வொரு ஆண்டும் சிறந்த நெசவாளர்கள் (பட்டு மற்றும் பருத்தி) மற்றும் சிறந்த வடிவமைப்பாளர்களை தேர்ந்தெடுப்பதற்கு, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் இணைப்பில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகளை பின்பற்றி, சிறந்த நெசவாளரை தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறைகளில் தேவைப்படும் இணங்களில் மாற்றம் செய்ய கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.45489/நிதி(தொழில்கள்)/2021, நாள் 21.10.2021-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.626 (அறுநூற்று இருபத்தாறு).

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர், சென்னை-600 104.
மாநில தலைமை கணக்காயர் (A&E)/(CAS)/(CA), சென்னை-600 018/09.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-600 001.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்-IV, சென்னை-600 009.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) / (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
நிதி(தொழில்கள் / வ.செ.பொது-I/II / வ.வ-I)த் துறை, சென்னை-600 009.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை சென்னை-600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(ஏ1/பி1)த் துறை, சென்னை-600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

21/10/21
அரசு சார்புச் செயலாளர்.

21/10/2021